**அக்டோபர் – 10**

# TNPSC துளிகள்

- அனுப்ரியா மதுமிதா லக்ரா என்பவர் விமான நிறுவனம் ஒன்றின் வணிக விமானத்தை இயக்கிய ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த முதலாவது பழங்குடியினப் பெண்மணியாக உருவெடுத்துள்ளார். இவர் ஒடிசாவில் உள்ள மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட மல்கான்கிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- பிஃபா அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், ஈரான் இஸ்லாமியக் குடியரசானது கடந்த 40 ஆண்டுகளில் முதன்முறையாக தற்பொழுது பெண் பார்வையாளர்களை கால்பந்து மைதானத்திற்குச் செல்ல அனுமதித்துள்ளது.
    - “நீலச் சிறுமி” என்று அழைக்கப்படும் ரசிகர் ஒருவர் ஒரு போட்டியில் கலந்து கொள்ள சிறுவனாக ஆடை அணிந்ததற்காக சிறையில் அடைத்து விடுவார்கள் என்ற பயத்தில் தன்னைத் தானே தீ வைத்துக் கொண்டதின் பின்னணியில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ஃபெனி ஆற்றில் இருந்து வினாடிக்கு 1.82 கன அடி தண்ணீரை இந்தியா எடுத்துப் பயன்படுத்த அனுமதிக்கும் வகையில் இந்தியாவிற்கும் வங்க தேசத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.
    - இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் திரிபுராவிள் உள்ள சப்ரூம் எனும் நகரத்திற்கு குடிநீர் வழங்குவதாகும்.
- “மகாத்மா காந்தி தேசிய தோழமைத் திட்டம்” என்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்க பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்துடன் இணைந்துள்ளதாக மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
    - இந்தத் திட்டமானது கிராமத்தில் உள்ள இளைஞர்களுக்குத் திறன்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமெரிக்காவைச் சேர்ந்த சிமோன் பைல்ஸ் என்பவர் ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் 15வது உலக ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம், அவர் இந்த நிகழ்வில் மிகவும் சிறப்பாக அறியப்பட்ட பெண்மணியாக (மொத்தம் 21 பதக்கங்கள்) உருவெடுத்துள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஏழாவது பொருளாதார அடிப்படையிலான கணக்கெடுப்பு – தமிழ்நாடு

- தமிழ்நாட்டின் ஆளுநரான பன்வாரிலால் புரோஹித் 7வது பொருளாதார அடிப்படையிலான கணக்கெடுப்பைத் தமிழகத்தில் தொடங்கி வைத்தார்.
- பொருளாதார அடிப்படையிலான கணக்கெடுப்பானது மாநிலத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களின் பல்வேறு செயல்பாடு மற்றும் கட்டமைப்பு பொருளாதார அம்சங்கள் குறித்தத் தகவல்களை வழங்குகின்றது.
- இது பொருளாதார நடவடிக்கைகளின் புவியியல் பரவல் / நிறுவனக் குழுக்கள், நிறுவனத்தின் உரிமை முறை மற்றும் பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் போன்ற மதிப்புமிக்க தகவல்களை வழங்குகின்றது.
- 2013 ஆம் ஆண்டின் பொருளாதார அடிப்படையிலான கணக்கெடுப்பின் படி, மாநிலத்தில் 50.29 லட்சம் நிறுவனங்கள் இயங்கி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

- 2013 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பைப் போலன்றி, இந்த முறை பொருளாதார அடிப்படையிலான கணக்கெடுப்பானது ஒரு செயலியைக் கொண்டு மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
- அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்ட மிகப்பெரிய மாவட்டம் காஞ்சிபுரம் ஆகும்.
- 32,000க்கும் மேற்பட்ட கணக்கீட்டாளர்கள் இந்தச் செயல்பாட்டில் ஈடுபட இருக்கின்றார்கள்.

## 1956 ஆம் ஆண்டில் சீனப் பிரதமர் சூ என்லாயின் மாமல்லபுரம் வருகை

- முதல் சீனப் பிரதமர் சூ என்லாய் என்பவர் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாமல்லபுரத்திற்கு வருகை புரிந்தார்.
- தனது வருகையின் போது இவர் புகழ்பெற்ற ஜெமினி படப்பிடிப்புக் கூடம் மற்றும் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை ஆகியவற்றிற்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.
- சுமார் 9 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை செழிப்பான துறைமுகமாக இருந்த மாமல்லபுரமானது பண்டைய சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றின் முறையே 'பட்டுப் பாதை' மற்றும் 'மசாலாப் பாதை' ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாக விளங்கியது.




## தூய்மையற்ற ரயில் நிலையங்கள்

- முக்கியமான ரயில் நிலையங்களின் மூன்றாம் நபர் தணிக்கை மற்றும் தூய்மைத் தரவரிசைப் படி, இந்தியாவில் உள்ள தூய்மையற்ற 10 ரயில் நிலையங்களில் 6 ரயில் நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.
- அவையாவன


| ரயில் நிலையம் | தர வரிசை |
|---|---|
| பெருங்களத்தூர் | 1 |
| கிண்டி | 2 |

| | |
|---|---|
| வேளச்சேரி | 4 |
| கூடுவாஞ்சேரி | 5 |
| சிங்கப்பெருமாள் கோயில் | 6 |
| பழவந்தாங்கல் | 8 |

# தேசியச் செய்திகள்

## WEF உலகளாவிய போட்டித் திறன் குறியீடு

- 2019 ஆம் ஆண்டின் உலகளாவிய போட்டித் திறன் குறியீட்டில் இந்தியா 10 புள்ளிகள் குறைந்து 68வது இடத்தில் உள்ளது.
- இந்த அறிக்கையானது உலக பொருளாதார மன்றத்தினால் (WEF - World Economic Forum) வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவின் மதிப்பெண் ஆனது மொத்தமுள்ள 12 அளவுருக்களில் 8 அளவுருக்களில் குறைந்துள்ளது. மற்ற நாடுகள் இந்தியாவை விட வேகமாக தங்களது உள்நாட்டு வணிகச் சூழலை மேம்படுத்தியுள்ளன.
- இந்த ஒட்டுமொத்த போட்டித் திறன் தரவரிசையில், சிங்கப்பூர் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தைப் பிடித்துள்ளது.





## மாலுமிகளின் சாதனம் – ஜெமினி

- ககன் செயற்கைக்கோளால் இயக்கப்பட்ட மாலுமிகளின் பயண மற்றும் தகவல் கருவியை (ஜெமினி) மத்திய புவி அறிவியல் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- ஜெமினி சாதனமானது பின்வருபவை குறித்த அவசரகால தகவல் மற்றும் தகவல் தொடர்புகளை தடையற்ற முறையிலும் திறம்படவும் பரப்ப இருக்கின்றது.
  - பேரிடர் எச்சரிக்கைகள்
  - சாத்தியமான மீன்பிடி மண்டலங்கள்
  - மீனவர்களுக்கு கடலின் நிலைமை குறித்த முன்னறிவிப்புகள்

- ❖ மீனவர்கள் கடற் கரையிலிருந்து கடலுக்குள் 10 முதல் 12 கிலோ மீட்டருக்கு அப்பால் செல்லும் போது அவர்களுக்கு பேரழிவு எச்சரிக்கைகள் தொடர்பான தகவல்களை இது வழங்க இருக்கின்றது.

***செயற்கைக்கோள்***

- ❖ ஜெமினி சாதனமானது ககன் செயற்கைக்கோள்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளை புளூடூத் தகவல் தொடர்பின் மூலம் கைபேசிக்கு மாற்றுகின்றது.
    - ○ ககன் (புவியிடங்காட்டியால் ஆதரிக்கப்பட்ட மிகுதிப்படுத்தப்பட்ட வழிநடத்துதல் அமைப்பு) செயற்கைக்கோள் அமைப்பானது ஜிசாட்-8, ஜிசாட் -10 மற்றும் ஜிசாட் -15 ஆகிய மூன்று தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளது.
- ❖ INCOIS ஆல் (இந்தியாவின் தேசிய கடல்சார் தகவல் சேவை மையம் - Indian National Center for Ocean Information Services) உருவாக்கப்பட்ட ஒரு கைபேசி செயலியானது தகவல்களை ஒன்பது பிராந்திய மொழிகளில் குறி விளக்கம் செய்து காட்டுகின்றது.




## தென்மேற்கு பருவமழை பின்னடைவு

- ❖ தென்மேற்குப் பருவமழையானது பஞ்சாப், ஹரியானா மற்றும் வடக்கு ராஜஸ்தானின் சில பகுதிகளிலிருந்து பின் வாங்கியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

- இது வழக்கமான தேதியை (அக்டோபர் 9) விட கிட்டத்தட்ட 40 நாட்களுக்குப் பிறகு பின்வாங்கியுள்ளது.
- இந்தப் பருவமழையானது 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் 1961 ஆம் ஆண்டில் மிகவும் தாமதமாக பின்வாங்கியது. 1961 ஆம் ஆண்டில் அக்டோபர் 1 அன்று பருவமழை பின்வாங்கத் தொடங்கியது.
- பருவ மழையின் பின்வாங்கலுக்கான இரண்டு அத்தியாவசிய நிபந்தனைகளை இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்த பின்னர் இந்தப் பின்வாங்கல் அறிவிக்கப்பட்டது.
  - தொடர்ச்சியான எதிர் சூறாவளி சுழற்சி
  - ஈரப்பதத்தின் படிப்படியாக குறைவு
- காற்றின் திசையை மாற்றியமைத்தலானது ஈரப்பதத்தைக் குறைக்கும். மேலும் இது வட இந்தியாவில் வெப்பநிலை வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

### eDantseva – வாய் சம்பந்தப்பட்ட சுகாதாரத் திட்டம்

- மத்திய சுகாதாரத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் eDantseva வலைத்தளம் மற்றும் கைபேசி செயலியை தொடங்கி வைத்தார்.
- வாய் சம்பந்தப்பட்ட சுகாதார தகவல் மற்றும் அது சார்ந்த அறிவு பரப்பல் குறித்த முதலாவது தேசிய டிஜிட்டல் தளம் இதுவாகும்.
- தேசிய வாய்வழி சுகாதாரத் திட்டம், அனைத்துவித பல் வசதிகள் மற்றும் கல்லூரிகளின் விரிவான பட்டியல், தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு, பொருள் பற்றிய தகவல்கள் இதில் உள்ளன.
- பல் / வாய்வழி உடல்நலப் பிரச்சினைகளின் அறிகுறிகள், அவற்றைத் தடுப்பதற்கான வழிகள் ஆகியவை பற்றிய தகவல்களை வழங்கும் 'அறிகுறிகள் சரிபார்ப்பு' என்ற தனித்துவமான அம்சமும் இதில் உள்ளது.

*பற்றி*

- தேசிய வாய்வழி சுகாதார திட்டம் (NOHP - National Oral Health Programme) 2014 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- புது தில்லியில் உள்ள எய்ம்ஸ் ஆனது NOHP ஐ செயல்படுத்துவதற்கான தேசிய சிறப்புமிகு மையமாக செயல்படுகின்றது.

## பொருளாதாரச் செய்திகள்


### விரைவு ஒப்புதல் வழி

- பிஏசி கையகப்படுத்துதல்களால் எசெல் பரஸ்பர நிதியைக் கையகப்படுத்துவதற்கு "விரைவு ஒப்புதல் வழியின்" கீழ் இந்திய போட்டி ஆணையம் (Competition Commission of India - CCI) தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- விரைவு ஒப்புதல் வழியின் கீழ் வழங்கப்பட்ட முதலாவது அனுமதி இதுவாகும்.
- விரைவு ஒப்புதல் என்பது CCI ஆல் கொண்டுவரப்பட்ட விரைவாக ஒப்புதல் அளிக்கும் செயல்முறையாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வேதியியலுக்கான நோபல் பரிசு

- 2019 ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசானது பின்வருபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - டெக்சாஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜான் பி குட்னொஃப்.
    - பிங்காம்டனில் உள்ள நியூயார்க் மாகாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எம் ஸ்டான்லி விட்டிங்ஹாம்.
    - ஜப்பானில் உள்ள மீஜோ பல்கலைக் கழகம் மற்றும் ஆசாஹி கேசி கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த அகிரா யோஷினோ.
- லித்தியம் அயனி மின்கலனின் வளர்ச்சிக்காக அவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. லித்தியம் அயனி மின்கலனானது "கம்பியற்ற, புதைபடிவ எரிபொருள் இல்லாத சமூகத்திற்கான" அடித்தளத்தை அமைத்துள்ளது.




- 1970களில் ஏற்பட்ட எண்ணெய் குறித்த பிரச்சினையின் போது லித்தியம் அயனி மின்கலனின் அடித்தளம் அமைக்கப்பட்டது.
- எம் ஸ்டான்லி வைட்டிங்ஹாம் என்பவர் டைட்டானியம் டி சல்பைடு எனப்படும் ஆற்றல் நிறைந்த ஒரு பொருளைக் கண்டுபிடித்தார். அவர் இதை ஒரு கேத்தோடு தயாரிக்கப் பயன்படுத்தினார்.
- இது லித்தியம் மின்கலனில் உள்ள நேர்மின் முனையாகும்.
- யோஷினோவின் உள்ளமைவின் அடிப்படையில் சோனி நிறுவனமானது 1991 ஆம் ஆண்டில் முதலாவது வணிக லித்தியம் அயனி மின்கலங்களை வெளியிட்டது.
- 97 வயதில், பேராசிரியர் ஜான் பி குட்னொஃப் நோபல் பரிசு பெற்ற மிகப் பழமையான மனிதர் ஆவார்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருது

- மூத்த இந்திய வனத்துறை அதிகாரியான ரமேஷ் பாண்டே என்பவர் புகழ்பெற்ற ஆசிய சுற்றுச்சுழல் அமலாக்க விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவருக்கு ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் (UNEP - United Nations Environment Programme) விருது வழங்கப்பட்டுள்ளது.
- 1996 ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த IFS அதிகாரியான இவர் லக்னோவில் தலைமை வனப் பாதுகாப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பின்வருவனவற்றிற்காக பாராட்டப்பட்டுள்ளார்.
    - வேட்டையாடுபவர்கள் குறித்த விசாரணை மற்றும் தகவல் சேகரிப்பு
    - எல்லை தாண்டிய சுற்றுச்சூழல் சார்ந்த குற்றங்களை எதிர்த்துப் போராடுதல்
- இந்த விருதானது எல்லை தாண்டிய சுற்றுச்சூழல் சார்ந்த குற்றங்களைத் தடுப்பதற்கு ஆசியாவில் உள்ள பொது அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட தலைசிறந்த சாதனைகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★